**World Christian Fellowship**
www.wcflondon.com
wcflondon@gmail.com

# *அப்போஸ்தலர்கள் – யாக்கோபு-James*

## *லூக்கா 6:12-16*

***லூக்கா 6:12-16, அந்நாட்களிலே, அவர் ஜெபம்பண்ணும்படி ஒரு மலையின்மேல் ஏறி, இராமுழுவதும் தேவனை நோக்கி: ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தார். பொழுது விடிந்தபோது, அவர் தம்முடைய சீஷர்களை வரவழைத்து, அவர்களில் பன்னிரண்டுபேரைத் தெரிந்து கொண்டு, அவர்களுக்கு அப்போஸ்தலர் என்று பேரிட்டார். அவர்கள் யாரெனில், பேதுரு என்று தாம் பேரிட்ட சீமோன், அவன் சகோதரனாகிய அந்திரேயா, யாக்கோபு, யோவான், பிலிப்பு, பர்தொலொமேயு, மத்தேயு, தோமா, அல்பேயுவின் குமாரனாகிய யாக்கோபு, செலோத்தே என்னப்பட்ட சீமோன், யாக்கோபின் சகோதரனாகிய யூதா, துரோகியான யூதாஸ்காரியோத்து என்பவர்களே.***

***முதல் குழுவினர்:***

1. *சீமோன் என்னும் பேதுரு*
2. *அந்திரேயா*
3. *யாக்கோபு*
4. *யோவான்*

*பேதுரு, யாக்கோபு மற்றும் யோவானின் பெயர்கள் பட்டியலில் மாறிமாறி இடம்பெற்றுள்ளது. பேதுருவின் பெயர் எல்லாவற்றிலும் முதலில் இடம்பெறுகிறது. ஆனால் இவர்களின் பெயர்கள் எப்போதுமே முதல் குழுவாகவே கருதப்படுகிறது.*

***இரண்டாம் குழுவினர்:***

1. *பிலிப்பு*
2. *பர்த்தொலொமேயு (அ) நாத்தான்வேல்*
3. *மத்தேயு*
4. *தோமா*

*இந்த இரண்டாவது குழுவும் எல்லா பட்டியலிலும் இடம்பெற்றுள்ளது.*

*பிலிப்பு, பர்த்தொலொமேயு, மத்தேயு மற்றும் தோமா ஆகிய நால்வரின் பெயர்கள் அடிக்கடி இடம் மாறி இடம்பெற்றாலும், இந்த இரண்டாம் குழுவில் பிலிப்புவின் பெயரே எப்போதும் முதலாவதாக இடம்பெறுகிறது.*

***மூன்றாம் குழுவினர்:***

1. *அல்பேயுவின் குமாரனாகிய யாக்கோபு*
2. *செலோத்தே என்னப்பட்ட சீமோன்*
3. *யாக்கோபின் குமாரனாகிய யூதாஸ்*
4. *யூதாஸ்காரியோத்து*

*எல்லா பட்டியலிலும் ஒன்றுபோலவே இடம்பெறுகிறது. நடுவில் இருக்கும் செலோத்தே என்னப்பட்ட சீமோன் மற்றும் யாக்கோபின் குமாரனாகிய யூதாஸ் ஆகிய இருவரின் பெயர்களும் அவ்வப்போது இடம் மாறி இடம்பெறுகிறது.*

*ஆனால் அப்பேயுவின் குமாரனாகிய யாக்கோபின் பெயர் முதலிலும் யூதாஸ்காரியோத்தின் பெயர் கடைசியிலும் இடம்மாறாமல் இடம்பெற்றுள்ளது.*

## *யாக்கோபு*

*புதிய ஏற்பாட்டில் மூன்று யாக்கோபுகள் இடம்பெறுகின்றனர்.*

- *செபதேயுவின் குமாரனாகிய யாக்கோபு.*
- *அல்பேயுவின் குமாரனாகிய யாக்கோபு.*
- *இயேசுவின் சகோதரனும், எருசலேம் திருச்சபையின் தலைவரும் யாக்கோபு நிருபத்தின் ஆசிரியருமான யாக்கோபு.*

*எனவே அப்போஸ்தலனாகிய யாக்கோபு, மிகச்சிறந்த யாக்கோபு.*

***தகப்பன்: செபதேயு***

***தாய்: சலோமி***

***சகோதரன்: யோவான்***

***சொந்த ஊர்: கப்பர்நகூம்***

*வச.**14,** பேதுருவையும் அவனுடைய சகோதரனாகிய அந்திரேயாவையும் தொடர்ந்து, யாக்கோபு மற்றும் யோவானின் பெயர்கள் இடம்பெறுகின்றன.*

*யாக்கோபு, செபதேயுவின் குமாரன். செபதேயு மீன்பிடிக்கும் தொழில் செய்து வந்தார். யாக்கோபும் யோவானும் அவரோடு சேர்ந்து மீன்பிடித்து வந்தனர்.*

*யாக்கோபைக் குறித்து நாம் கொஞ்சமாய் அறிந்திருக்கிறோம். ஆனால் நாம் அறிந்ததைக் காட்டிலும் அவன் முக்கியத்துவம் வாய்ந்தவன். இரண்டு சீஷர்கள் பட்டியலில் இவனுடைய பெயர் பேதுருவைத் தொடர்ந்து இடம்பெறுகிறது.*

*இவன் மிகச் சிறந்த தலைவனாயிருந்திருக்கக்கூடும் என்று நம்பத் தூண்டுகிறது. சகோதரர்களாகிய யாக்கோபு மற்றும் யோவானின் பெயர்கள் இணைந்து இடம்பெறும்போதெல்லாம் யாக்கோபின் பெயரே முதலில் இடம்பெறுகிறது. இது யாக்கோபே இருவரிலும் மூத்தவன் என்பதையும் முக்கியமானவன் என்பதையும் காட்டுகிறது.*

*சுவிசேஷங்கள் எல்லாவற்றிலும் யாக்கோபின் பெயர் யோவானோட இணைந்தே இடம்பெறுகிறது. யோவானில்லாமல் யாக்கோபைக் குறித்த எந்த தகவலையும் நாம் அறிந்துகொள்ளமுடியாது.*

*சுவிசேஷங்களில் இவர்கள் இருவரையும் பிரித்துப் பார்க்கமுடியாது.*

*ஆனால் யாக்கோபு யோவானைக் காட்டிலும் மேலானவனாய்க் காட்டப்பட்டுள்ளது. அவர்களின் தொழில் வெற்றியாய் நடந்தது.*

***மாற்கு** 1:19-20, **அவர் அவ்விடம் விட்டுச் சற்று அப்புறம் போனபோது, செபெதேயுவின் குமாரன் யாக்கோபும் அவன் சகோதரன் யோவானும் படவிலே வலைகளைப் பழுது பார்த்துக்கொண்டிருக்கிறதைக் கண்டு, உடனே அவர்களையும் அழைத்தார்; அப்பொழுது அவர்கள் தங்கள் தகப்பனாகிய செபெதேயுவைக் கூலியாட்களோடு படவிலே விட்டு, அவருக்குப் பின்சென்றார்கள்.***

***மத்தேயு** 4:21-22, **அவர் அவ்விடம் விட்டுப் போகையில், வேறே இரண்டு சகோதரராகிய செபெதேயுவின் மகன் யாக்கோபும்,***

**அவன் சகோதரன் யோவானும் தங்கள் தகப்பன் செபெதேயுவுடனே படவிலிருந்து, தங்கள் வலைகளைப் பழுதுபார்த்துக்கொண்டிருக்கிறபோது, அவர்களைக் கண்டு, அவர்களையும் அழைத்தார். உடனே அவர்கள் படவையும் தங்கள் தகப்பனையும் விட்டு, அவருக்குப் பின் சென்றார்கள்.**

*இவர்களுடைய தகப்பனார் மீன்பிடி தொழிலை செய்துவந்தனர். அவர்களுடைய தொழிலுக்கு பலரை வேலைக்கு நியமித்த அதை பெரிய அளவில் செய்திருக்கவேண்டும். பேதுரு-அந்திரேயாவைப் போன்று யாக்கோபு-யோவானும் இயேசுவின் முதல் கட்ட தெரிந்துகொள்ளுதலுக்கு பாத்திரவான்களாகிறார்கள். கலிலேயாவின் கரையில் இவர்கள் இருவரையும் இயேசு தெரிந்தெடுத்து, தன்னுடைய நெருங்கிய வட்டாரத்தில் வைத்துக்கொண்டார்.*

*அந்திரேயாவைப் போலல்லாமல் நெருங்கிய வட்டத்தில், முதல் மூவரில் யாக்கோபும் ஒருவனாயிருந்தான்.*

- *அவன் மறுரூப மலையில் இயேசுவோடு இருந்தான்.*
- *இயேசு ஜெபித்துக்கொண்டிருந்த கெத்சமனே தோட்டத்தில் இருந்தான்.*
- *இயேசுவோடு நெருங்கியிருந்த மூவரில் இவனும் ஒருவன். ஆனால் இவனைக் குறித்து நமக்கு அதிகம் தெரியாது.*

*இயேசு யாக்கோபுக்கு கொடுத்த பெயரை வைத்தே யாக்கோபு யார் என்பதை அறிய முயற்சிப்பது சிறந்த வழி. இயேசு அவர்களுக்கு பொவனெர்கேஸ் என்று பெயரிட்டிருந்தார்.*

***மாற்கு 3:17, செபெதேயுவின் குமாரனாகிய யாக்கோபு, யாக்கோபின் சகோதரனாகிய யோவான், இவ்விருவருக்கும் இடிமுழக்கமக்களென்று அர்த்தங்கொள்ளும் பொவனெர்கேஸ் என்கிற பெயரிட்டார்.***

*நாம் யாரையாவது இடிமுழக்க மக்கள் என்று பெயரிட்டால், அவர்களுடைய ஆளத்துவத்தை விவரிக்க முயற்சிக்கிறோம் என்று அர்த்தம்.*

*இது யாக்கோபு வைராக்கியமுள்ள, முழங்கக்கூடிய, வாஞ்சையுள்ள, ஆர்வமுள்ள ஒரு நபர் என்பதைக் காட்டுகிறது. இது பழைய ஏற்பாட்டில் "வந்து பார் என் வைராக்கியத்தை" என்று முழக்கமிட்டு, ஆகாபின் வீட்டை முற்றிக்கையிட்டு, தேசத்திலிருந்த பாகால் ஆராதனையை அகற்றிய யெகுவோடு ஒப்பிடத்தூண்டுகிறது **(2 இராஜாக்கள் 10)**.*

*யாக்கோபு பற்றியெரியக்கூடிய வாஞ்சையுள்ள ஒரு நபர். அதினால் அவன் அதிக விரோதிகளை சம்பாதித்திருக்கவேண்டும் என்று எண்ணத் தூண்டுகிறது.*

*அந்திரேயா அமைதியான முறையில் ஆட்களை தேவனண்டை கொண்டுவருகிற நபராய் இருந்தான். யாக்கோபோ அவர்களை விரட்டுகிறவனாயிருந்தான். ஆவிக்குரிய தலைமைத்துவத்தில் இதுபோன்ற இடிமுழக்க மக்களுக்கு நிச்சயமாய் இடமுண்டு.*

*யாக்கோபு தன்னுடைய ஆளத்துவத்திலும் குணாதிசயத்திலும் அப்படிப்பட்ட நபராகவே இருந்துள்ளான் என்பது தெளிவாய் தெரிகிறது. ஆனால் அவனுடைய கோபங்கொள்ளுகிற சுபாவத்தை ஒருசில இடங்களில் இயேசுவே நியாயப்படுத்துவதுபோல் தெரிகிறது.*

*ஆலயத்திற்குள் இருந்த ஜனங்கள் தேவனை கனவீனப்படுத்துகிறார்கள் என்பதை அறிந்து இயேசு அவர்களை சாட்டையைக் கொண்டு அடித்து விரட்டி ஆலயத்தை சுத்தமாக்கியதை யாக்கோபு நன்றாகவே அறிந்திருந்தான்.*

*யாக்கோபும், தன்னுடைய கோபம் நியாயமானது, தேவனுடைய பரிசுத்தத்தை காக்கக்கூடியது என்று நம்பினான்.*

*ஆனால் சில வேளைகளில் அவனுடைய வைராக்கியம் நியாயமானதாய் இல்லை.*

*லூக்கா 9ஆம் அதிகாரத்தில் இந்த இடிமுழக்க மனிதன் வித்தியாசமாய் பேசுகிறான்.*

*இயேசு தன்னுடைய கடைசி பஸ்காவை ஆசரிக்கும்பொருட்டும் தன்னுடைய அடக்கத்திற்கும், உயிர்த்தெழுதல் சம்பவிப்பதற்கும் எருசலேமுக்குப் போக நேரிடுகிறது. அவர் எருசலேமுக்குப் போவதற்கு தன்னுடைய முகத்தைத் திருப்புகிறார்.*

**லூக்கா** *9:51,* **பின்பு**, **அவர் எடுத்துக்கொள்ளப்படும் நாட்கள் சமீபித்தபோது**, **அவர் எருசலேமுக்குப் போகத் தமது முகத்தைத் திருப்பி**,

*தற்போது அவர்கள் கலிலேயாவிலிருந்து புறப்பட்டு, எருசலேமுக்கு இறங்கி வருகிறார்கள். அவர்கள் சமாரியாவைக் கடந்தே எருசலேமுக்குப் போயாகவேண்டும்.*

*அங்கே சமாரியர்களின் பட்டணம் உண்டு. தங்குவதற்கு வேறு இடமும் அங்கு இல்லை.*

அந்நாட்களில் முன்பதிவு செய்யும் வசதியும் இல்லை என்பதினால் செய்தி கொண்டுபோகும் தூதுவனை முன்பாக அனுப்பவேண்டும். இந்தத் தருணத்தில் தங்குவதற்கு இடம்தேடி பல்வேறு ஜனங்கள் ஊடுருவத் துவங்கினர். ஆகையினால் இயேசு போவதற்கு முன்பு செய்தி கொண்டுபோகும் தூதுவனை முன்பாக அனுப்பினர்.

அவர்கள் சமாரியர்களின் பட்டணத்திற்கு கடந்துபோனார்கள். சமாரியர்களும் யூதர்களும் ஒருவரையொருவர் பகைத்தனர். சமாரியர்கள் என்பவர்கள் புறஜாதியரோடு கலப்புத் திருமணம் செய்துகொண்டவர்கள் என்பதினால் இவர்கள் வெறுத்து ஒதுக்கப்பட்ட யூதர்கள்.

அவர்கள் புறஜாதி மக்களோடே கலப்புத் திருமணம் செய்ததினால் இஸ்ரவேலின் பரிசுத்த வழியை தவரவிட்டவர்கள். இந்தச் செய்கையினால் இவர்கள் யூதர்களால் வெறுத்து ஒதுக்கப்பட்டனர். யூதர்கள் சமாரியர்களின் பட்டணத்திற்கு போகவேமாட்டார்கள்.

சமாரியர்கள் யூதர்களை மட்டும் வெறுக்கவில்லை. அவர்களின் எருசலேம் ஆலய ஆராதனையையே வெறுத்தனர். இவர்கள் தங்களுக்கென்று கெர்சோம் மலையில் ஆராதனை ஸ்தலத்தை ஏற்படுத்தியிருந்தனர். ஆகையினால் மேசியாவின் வருகையைக் குறித்த நற்செய்தியையும் வெறுத்தனர். அதில் அவர்களுக்கு கொஞ்சமும் ஆர்வமில்லை. யூதர்களுடைய எல்லா சடங்காச்சாரங்களையும் அவர்கள் வெறுத்தனர்.

இயேசுவுக்கு முன்பாக சென்ற அந்த செய்தி கொண்டுபோன தூதுவனோ “வாருங்கள்! மேசியா வருகிறார்” என்று ஒருவேளை சொல்லியிருந்திருக்கக்கூடும்.

***லூக்கா** 9:52-53, **தமக்கு முன்னாகத் தூதர்களை அனுப்பினார். அவர்கள் போய், அவருக்கு இடத்தை ஆயத்தம்பண்ணும்படி சமாரியருடைய ஒரு கிராமத்திலே பிரவேசித்தார்கள். அவர் எருசலேமுக்குப் போக நோக்கமாயிருந்தபடியினால் அவ்வூரார் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை.***

*எருசNலுமுக்கு போய் அங்கு ஆராதனையில் பங்குகொள்ளப்போகிற ஒருவரோடு அவர்களுக்கு எந்தத் தொடர்பும் இல்லை. ஆகையினால் அவரை அவர்கள் வரவேற்கவில்லை.*

*எனவே அவருடைய சீஷர்களான யாக்கோபும் (மீண்டும் பெயர் முதலில் இடம்பெற்றுள்ளது) யோவானும் அதைப் பார்த்து பேசத் துவங்கினர்.*

*அவர்கள் ஆண்டவரைப் பார்த்து இப்படியாய் கேட்வில்லை:*

*"ஆண்டவரே, இந்த அன்பான ஜனங்கள் ஞானமடையும்படிக்கு நாம் ஜெபிக்கவேண்டுமா?"*

*"நீர் தான் மேசியா என்பதை காண்பிக்கவேண்டுமா?"*

*ஆனால் அவர்கள் என்ன கேட்டார்கள் தெரியுமா?*

***லூக்கா** 9:54, **அவருடைய சீஷராகிய யாக்கோபும் யோவானும் அதைக் கண்டபோது: ஆண்டவரே, எலியா செய்ததுபோல, வானத்திலிருந்து அக்கினி இறங்கி இவர்களை அழிக்கும்படி நாங்கள் கட்டளையிட உமக்குச் சித்தமா என்று கேட்டார்கள்.***

*இது பழகுவதற்கு ஏற்ற மனநிலை அல்ல.*

*அவர்கள் இயேசுவிடத்தில் வல்லமையைக் கூட கேட்கவில்லை. அவர்களுக்கே வல்லமை இருந்ததாக நம்பினர். அதைப் பயன்படுத்தும் அனுமதியை மட்டுமே கேட்கின்றனர்.*

*இதுதான் இடிமுழக்கத்தின் மகன் என்பது.*

*சமாரியாவுக்குள் பிரவேசித்தது ஒருவேளை மிகவும் கடினமான ஒரு அனுபவமாயிருந்திருக்கக்கூடும். செய்தி கொண்டுபோன தூதுவனை சபித்தும் கல்லெறிந்தும் துரத்தியிருக்கலாம். அவர்களின் பகை அவ்வளவு பெரியது. ஆனால் இயேசுவை மேசியா என்று ஒப்புக்கொள்ளாததே யாக்கோபுக்கும் யோவானுக்கும் கோபத்தைத் தூண்டியது.*

*தலைவனாகிய யாக்கோபின் செய்கை வழக்கம்போல் தேவனிடத்திலிருந்து வல்லமையைப் பெற்று, வானத்திலிருந்து அக்கினியை இறக்கி, அந்த பட்டணம் முழுவதையும் சாம்பலாக்கி, இரட்சிப்படாதவர்களை அழிப்பதே திட்டமாயிருந்தது.*

*அவர்களை இயேசுவிடம் கொண்டுவாருங்கள் என்று அந்திரேயா ஒருவேளை சொல்லியிருந்திருக்கக்கூடும்.*

*யாக்கோபு அவர்களை எரித்துவிடுவோம் என்கிறான்.*

*இது சரியான மிஷனரி ஆவி அல்ல.*

*இப்படிப்பட்ட மனிதனையும் அவனுடைய சகோதரனையும் இயேசு அப்போஸ்தலர்களாய் இருப்பதற்கு அழைத்தது ஆச்சரியமாயிருக்கிறதல்லவா?*

***லூக்கா** 9:55-56, **அவர் திரும்பிப்பார்த்து: நீங்கள் இன்ன ஆவியுள்ளவர்களென்பதை அறியீர்கள் என்று அதட்டி, மனுஷகுமாரன் மனுஷருடைய ஜீவனை அழிக்கிறதற்கு அல்ல, இரட்சிக்கிறதற்கே வந்தார் என்றார். அதன்பின்பு அவர்கள் வேறொரு கிராமத்துக்குப் போனார்கள்.***

*அந்திரேயாவைப் போல் இருக்கமுடியமா?*

*ஆகையினால் அவர்கள் வேறொரு கிராமத்தின் வழியாக போக நேரிடுகிறது.*

*இதில் ஒரு நேர்மை இருக்கிறது. இதில் ஏதோ ஒன்று எனக்கு பிடித்திருக்கிறது. கிறிஸ்துவுக்கு அவமானத்தைக் கொண்டுவருவதைக் காட்டிலும் அவருடைய நீதியுள்ள அதட்டலுக்கு செவிசாய்ப்பது நல்லதல்லவா?*

*மேசியாவுக்கு ஒரு அவமானம் நேரும்போது அதற்கு அவர்கள் கொதித்தெழுந்தது எனக்கு பிடித்திருக்கிறது. ஆனால் பிதாவாகிய தேவன் கனவீனப்படுவார், வைராக்கியங்கொள்வார், கோபப்படுவார் என்று இயேசு அங்கு கோபப்படுகிறார்.*

***அம்மாவைக் கொண்டு:***

*சீஷர்களைக் குறித்து சுவிசேஷங்களில் இடம்பெற்றுள்ளவற்றில் இது சற்று விநோதமானது. யாக்கோபு உறுதியும் வாஞ்சையும் வைராக்கியமும் கூர்மையானவனுமாயிருந்தான். ஆனால் அதே நேரம் ஓர் உயர்ந்த ஸ்தானத்தை அடைவதற்கும் அவர்கள் வாஞ்சையாயிருந்தார்கள்.*

***மத்தேயு** 20:20, **அப்பொழுது**, **செபெதேயுவின் குமாரருடைய தாய் தன் குமாரரோடுகூட அவரிடத்தில் வந்து**, **அவரைப் பணிந்துகொண்டு: உம்மிடத்தில் ஒரு விண்ணப்பம் பண்ணவேண்டும் என்றாள்.***

*அவர்களுடைய அம்மாவை இயேசுவிடத்தில் அனுப்புகிறார்கள். அவளால் இயேசுவை மென்மையாய் அணுக முடியும் என்று எண்ணினர்.*

***மத்தேயு** 20:21, **அவர் அவளை நோக்கி: உனக்கு என்ன வேண்டும் என்று கேட்டார். அதற்கு அவள்: உம்முடைய***

***ராஜ்யத்திலே என் குமாரராகிய இவ்விரண்டுபேரில் ஒருவன் உமது வலது பாரிசத்திலும், ஒருவன் உமது இடது பாரிசத்திலும் உட்கார்ந்திருக்கும்படி அருள்செய்யவேண்டும் என்றாள்.***

*இந்த சிந்தையை அவர்கள் எங்கேயிருந்து பெற்றுக்கொண்டார்கள்?*

*செபதேயு எப்படிப்பட்டவர் என்று நமக்குத் தெரியாது. ஆனால் திருமதி. செபதேயு சற்று வெளிப்படையான நபர்.*

*அவள் மேசியாவுக்கு கட்டளைக் கொடுக்கிறாள்.*

*பாவம் திருமதி. செபதேயு!*

*செபதேயு பெரும்பாலும் தன்னுடைய நேரத்தை படகிலேயே செலவழித்திருக்கவேண்டும்.*

*அவர்கள் இயேசுவின் நெருங்கிய வட்டத்தில் இருந்தவர்கள் என்பது அவர்களுக்கு நன்றாய் தெரியும். அவர்கள் சீஷர்கள் என்றே அழைக்கப்பட்டனர். அவர்களுக்கு அவரை மிக நன்றாய் தெரியும். அவர்கள் அந்த ஸ்தானத்தை விரும்பினார்கள். அவர்கள் சரியான பாதையில் தான் நிற்கிறார்கள். அதை அவர்களும் அறிந்திருந்தார்கள். அதற்குள் தன் அம்மாவை ஈடுபடுத்துகிறார்கள்.*

*அவள் சற்றும் தயங்கவில்லை. அந்த அளவிற்கு அவள் வெளிப்படையானவள். அவர்களின் எதிர்பார்ப்பை இயேசுவுக்கு முன்பாகக் கொண்டுபோகிறாள்.*

***மத்தேயு** 20:22, **இயேசு பிரதியுத்தரமாக: நீங்கள் கேட்டுக்கொள்ளுகிறது இன்னது என்று உங்களுக்குத் தெரியவில்லை. நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிக்கவும், நான் பெறும் ஸ்நானத்தை நீங்கள் பெறவும்***

***உங்களால் கூடுமா என்றார். அதற்கு அவர்கள்: கூடும் என்றார்கள்.***

*உபத்திரவப்படுகிற பாதையைக் குறித்து இயேசு பேசுகிறார்! அவர் உபத்திரவப்பட்டதினால் உயர்ந்த ஸ்தானத்தை அடைகிறார். யார் அவருக்காய் அதிக உபத்திரவப் படுகிறார்களோ அவர்களே அந்த ஸ்தானத்திற்கு தகுதியானவர்கள். பாடு அனுபவிப்பவர்களுக்கே அந்த ஸ்தானம் கொடுக்கப்படுகிறது.*

*ஆகையால், நான் பருகப்போகிற பாத்திரத்தில் உங்களால் பருகமுடியுமா?*

*தங்களுடைய சுய இலக்கை அடையும் நோக்கத்துடன் ''எங்களால் முடியும்'' என்று பதிலளித்தார்கள்.*

*பொறுப்பில்லாத, கடினமான, வைராக்கியமான, வாஞ்சையுள்ள, சுயக் குறிக்கோள் கொண்ட நபர்களை தேவன் ஒரு நோக்கத்தோடு ஊழியத்திற்கு அழைப்பாரா?*

*ஆம்! தேவன் எப்போதும் அப்படியே செய்கிறார்.*

*அவர்களை செதுக்கும் பொறுப்பை தேவன் ஏற்க விரும்புகிறார்.*

*அவர் ஊழியம் செய்ய விரும்பும் மனிதர்களிடம் நிவிர்த்திசெய்யப்படவேண்டிய பிரச்சனைகள் இருந்தது. வாஞ்சையோடும் வைராக்கியத்தோடும் உறுதியோடுமிருந்த இந்த சகோதரர்கள் சூழ்நிலை வாய்த்தபோது வல்லமையாய் எடுத்துப் பயன்படுத்தப்படுகின்றனர்.*

***மத்தேயு** 20:23-24, **அவர் அவர்களை நோக்கி: என் பாத்திரத்தில்; நீங்கள் குடிப்பீர்கள், நான் பெறும் ஸ்நானத்தையும் நீங்கள் பெறுவீர்கள்; ஆனாலும், என் வலது பாரிசத்திலும் என் இடது***

***பாரிசத்திலும் உட்கார்ந்திருக்கும்படி என் பிதாவினால் எவர்களுக்கு ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிறதோ அவர்களுக்கேயல்லாமல், மற்றொருவருக்கும் அதை அருளுவது என் காரியமல்ல என்றார். மற்றப் பத்துப்பேரும் அதைக்கேட்டு, அந்த இரண்டு சகோதரர்பேரிலும் எரிச்சலானார்கள்.***

*தேவனுடைய ராஜ்யத்தில் அப்போஸ்தலர்களின் பங்களிப்பு உள்ளது. ஆம்! அவர்கள் பன்னிரண்டு கோத்திரங்களை அரசாளுவார்கள். ஆனால் சிலருக்கு மேன்மையான ஸ்தானம் கொடுக்கப்படுகிறது. அதை பிதா மட்டுமே அறிவார்.*

*பதவியை அடைவதே அவர்களுடைய வைராக்கியமாய் இருந்தது. அதினால் அவர்கள் இயேசுவையும் தேவனுடைய ராஜ்யத்தையும் மட்டுப்படுத்தினர். அவர்கள் இருவரையும் செதுக்க பல வேலைகள் செய்யவேண்டியுள்ளது.*

*யாக்கோபு கிரீடத்தை விரும்பினான்; இயேசு அவனுக்கு பாத்திரத்தைக் கொடுக்கிறார்.*

*யாக்கோபு அதிகாரத்தை விரும்பினான்; இயேசு அவனுக்கு வேலைக்காரன் ஸ்தானத்தைக் கொடுக்கிறார்.*

*யாக்கோபு ஆளுகை செய்ய விரும்பினான்; இயேசு அவனை வெட்டும் பட்டயத்தை அவனுக்குக் கொடுக்கிறார்.*

*பதினான்கு ஆண்டுகள் கழித்து அந்த பட்டயத்தின் நிழலிலே யாக்கோபு பரலோகத்தைக் காண்கிறான்.*

***அப்போஸ்தலர்*** *12:1-2,* ***அக்காலத்திலே ஏரோதுராஜா சபையிலே சிலரைத் துன்பப்படுத்தத் தொடங்கி; யோவானுடைய சகோதரனாகிய யாக்கோபைப் பட்டயத்தினாலே கொலைசெய்தான்.***

*தற்போது ஏரோது திருச்சபைக்கு விரோதமாகவும், சபை வளர்ச்சியைக் கண்டும், சுவிசேஷம் பரவும் வேகத்தைக் கண்டும் எரிச்சலடைந்துள்ளான். அது மக்களை பாதிக்கப்போகிறது. அதினால் திருச்சபையை உபத்திரவப்படுத்தத் துவங்குகிறான்.*

***திருச்சபையின் வளர்ச்சியைத் தடைபண்ண நினைத்த ஏரோது, யாரைக் கொன்றான்?***

***பேதுரு?***
*இல்லை.*
***யோவான்?***
*இல்லை.*

***யாக்கோபு.***

*இந்தத் தருணத்தில் யாக்கோபு ஒரு சேனையாய் மாறியிருந்தான். ஆவிக்குரிய வல்லமையின் பிரதிநிதியாய் மாறியிருந்தான். ஏரோது, அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தின் முதல் பன்னிரண்டு அதிகாரங்களில் இடம்பெற்றுள்ள பிரபல பரசங்கியாராகிய பேதுருவைக் கொல்லவில்லை. அல்லது அவருடைய உடன் ஊழியனாய் அவனோடு பயணித்த யோவானைக் கொல்லவில்லை. மாறாக, அவன் யாக்கோபை கொலை செய்கிறான்.*

*இடிமுழக்கத்தின் மகன் என்று இயேசுவினால் அழைக்கப்பட்ட இவன், பரிசுத்த ஆவியினாலே ஊக்குவிக்கப்பட்டு தேவனுக்காய் வாழும்படியான பாரமும் வைராக்கியமும் உள்ளவனாய் செதுக்கப்படுகிறான். அவனுடைய பலத்தையும் துடிப்பையும் தெய்வீகத் திட்டத்திற்காகவும் சத்தியத்தைப் பாதுகாப்பதற்காகவும்*

*பிரயோகப்படுத்தி, தேவனை மகிமைப்படுத்தும் காரியங்களில் தன்னுடைய ஆர்வத்தை செலுத்துகிறான்.*

*வாழ்க்கையின் ஏதோ ஒரு கட்டத்தில் அவனுடைய கோபத்தை கட்டுப்படுத்தவும், நாவை அடக்கவும், வைராக்கியத்தை திசை திருப்பவும், பழிவாங்குதலைக் கைவிடவும், தன் சுய குறிக்கோளை விட்டுவிடவும் கற்றுக்கொண்டான். துணிச்சல் கொண்டவனாய், வைராக்கியமுள்ளவனாய் சிலவேளைகளில் இரக்கமற்றவனாய், உணர்வற்றவனாய், சுயக் குறிக்கோள் கொண்டவனாய், வாஞ்சையோடிருந்த இந்த யாக்கோபு, தேவனுடைய கருவியாய் மாறுகிறான்.*

*திருச்சபையின் வளர்ச்சியை தடைபண்ண வேண்டும் என்று வந்தபோது, இவன் மரித்தால் மட்டுமே அது சாத்தியம் என்று ஏரோது எண்ணுமளவிற்கு இவன் முக்கியத்துவம் வாய்ந்த ஒருவனாய் இருந்துள்ளான். அவன் அந்த பாத்திரத்தில் பருகினான். அவனுடைய வாழ்க்கை சொற்பமானது. பட்டயத்தின் கூர்மைக்கு வெகு சீக்கிரத்தில் இறையாகிவிட்டான்.*

*சீஷர்களில் முதலாவது இரத்தசாட்சியாய் மரிக்குமளவிற்கு யாக்கோபின் வைராக்கியம் இருந்தது. கி.பி.44இல் யூதேயாவை அரசாண்ட ஏரோது அக்கிரிப்பாவின் கட்டளையின்பேரில் ஆதித்திருச்சபையை உபத்திரவப்படுத்தும்போது யாக்கோபு பட்டயத்தினால் வெட்டிக் கொலை செய்யப்பட்டான்.*

*ஒரு சரித்திர நிபுணர் இப்படியாய் பதிவுசெய்கிறார். யாக்கோபை கொலைசெய்யக் கொண்டுபோகும் பொறுப்பை ஏற்ற ஒரு இராணுவ அதிகாரி, யாக்கோபின் வைராக்கியத்தைக் கண்டு தன் பாவ வாழ்;க்கையை விட்டு மனந்திரும்பி, அப்போஸ்தலரின் பாதத்தில் விழுந்து, தான்*

அவரை கடினமாய் நடத்தினதற்காய் மன்னிப்புக் கேட்டாராம்.

தன் காலில் விழுந்த அந்த அதிகாரியை தூக்கிவிட்டு, அவரை ஆரத் தழுவி முத்தமிட்டு, "உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டு உனக்கு சமாதானம் உண்டாவதாக, என் மகனே!" என்று சொன்னதாகவும் அந்த பதிவில் இடம்பெற்றுள்ளது. உடனே மனமாற்றம் அடைந்த அந்த அதிகாரி, இயேசுவுக்கு தன் வாழ்க்கையை அர்ப்பணிப்பதாகவும் பகிரங்கமாய் அறிக்கையிட்டு, யாக்கோபோடு சேர்ந்து சிரச்சேதம் செய்யப்பட்தாகவும் அந்த பதிவில் உள்ளது.

யாக்கோபு தன் மரண தருவாயில் சற்று அந்திரேயாவைப் போல் செயல்பட்டு ஒருவரை கிறிஸ்துவுக்குள் வழிநடத்தியுள்ளார்.

வாஞ்சையுள்ள, வைராக்கியமுள்ள, முன்னுதாரணமாய் வாழக்கூடிய, ஆற்றல்கொண்ட, பலம்வாய்ந்த, குறிக்கோள் கொண்ட மக்கள் தேவனுக்கு தேவை. ஆனால் உணர்வற்ற வைராக்கியம் கொடூரமானது.

அமெரிக்காவின் புகழ்பெற்ற சுவிசேஷகர் பில்லி சண்டேவின் பிள்ளைகள் அனைவரும் அவிசுவாசத்தில் மரித்தனர். யாக்கோபும் ஒருவேளை அப்படி மரித்திருந்திருக்கக்கூடும். ஆனால் அவனுக்கு புடமிடுதல் அவசியப்பட்டது.

மனிதர்களில் பற்றியெரிகிற, பிரகாசிக்கிற, வாஞ்சையுள்ள, ஆர்வமுள்ள, தோல்விக்கு தகுதியுள்ள, எல்லாவற்றையும் அனுசரித்துக்கொள்ளக்கூடிய குணாதிசயம் கொண்ட நபர்களில் தேர்ந்தெடுக்கச் சொன்னால், நான் வாஞ்சையுள்ள நபரையே தெரிந்துகொள்வேன்.

ஆனால் அவனை கடிவாளமிடுவதற்கு அதிக வேலை செய்யவேண்டியுள்ளது. கர்த்தருடைய கிருபையினால் அவன்

*கட்டுக்கடங்கினால், முக்கியத்துவம் வாய்ந்த, பலமுள்ள, அர்ப்பணிப்புள்ள, அவனை கொலைசெய்தாலொழிய திருச்சபையின் வளர்ச்சியை தடுக்கமுடியாது என்று கருதக்கூடிய அளவிற்கு ஒரு யாக்கோபை நாம் காணமுடியும்.*

*தேவனுக்கு அவருடைய பேதுருக்கள் தேவை,*

*தேவனுக்கு அவருடைய அந்திரேயாக்கள் தேவை,*

*தேவனுக்கு அவருடைய யாக்கோபுகளும் தேவை.*